2017 ஜுன் 28]

உத்தரவின்பேரில், அவர்களுடைய சேலம் மாவட்டம், வீரபாண்டிக்கு அருகில் இருக்கக்கூடிய பனமரத்துப்பட்டியில் ஒரு புதிய சார்–பதிவாளர் அலுவலகம் அமைப்பதற்கான ஏற்பாடுகளை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கண்டிப்பாகச் செய்யும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.ஆர். இராஜா அவர்கள்.*

திரு. எஸ்.ஆர். இராஜா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாம்பரம் நகரத்தில் மட்டும் 2 சார்–பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன. அந்த இரண்டு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டித் தரப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.சி. வீரமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தாம்பரம் நகரத்தில் இரண்டு சார்–பதிவாளர் அலுவலகங்கள் இயங்கி வருவதாகக் கூறியிருக்கிறார்கள். அந்த இரண்டு அலுவலகங்களும் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. அந்த இரண்டு அலுவலகங்களுக்கும் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, கண்டிப்பாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 99, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

99—

சொந்தக் கட்டடம்

*8667—**திரு. சு. புகழேந்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுராந்தகம் தொகுதி, மதுராந்தகத்தில் உள்ள போக்குவரத்துக் கழக பணிமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) மதுராந்தகத்திலுள்ள பேருந்துப் பணிமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு தகுந்த நிலம் கிடைத்த பின்பு, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.*

திரு. சு. புகழேந்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மாவை வணங்குகிறேன். என்னைப் பெற்றெடுத்த அம்மாவை வணங்குகிறேன். என் வாழ்நாளில் மறக்கமுடியாத நாள் இன்று. ஆம். 2008–ல் ஜூன் 27 ஆம் தேதி மாலை கையில் பெட்டியோடு புறப்பட்டேன். மகனே எந்த ஊரில் கூட்டம் என்று என் தாய் திருமதி ரஞ்சிதம் அவர்கள் என்னிடம் கேட்டார். மதுரையில் கூட்டம் என்று சொல்லிவிட்டு, புறப்பட்டுச் சென்றேன். இந்த நாள், இதே நேரம் 2008 ஆம் ஆண்டு 27 ஆம் தேதி மதுரையில் கூட்டம் என்று என் தாயாரிடம் தெரிவித்து, போய் வருகிறேன் என்று சொல்லிவிட்டு, புறப்பட்டுச் சென்றேன். 2008 ஆம் ஆண்டு இதே நாள், இதே நேரம் தொலைபேசி வாயிலாக அம்மா மறைவுற்றதாக செய்திதான் வந்தது.*

2017 ஜூன் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என் அம்மாவின் நினைவு நாள் இன்று. இந்த மன்றத்தில் நின்று நான் பேசுகிறேன். என் தலைவர்மீது கொண்ட பாசத்தால் அவர் பெயர் வைத்த என்னுடைய மகன் பேரவை மாடத்திலிருந்து அவை நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறான். சாதாரணமான, சாமானிய பேச்சாளராக இருந்த என்னை இந்த மாமன்றத்தில் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கியவர் நாடே போற்றும் நல்லாட்சி நாயகராக விளங்கியவர், மக்கள் நலத் திட்டங்கள் பலவற்றை வழங்கியவர், பொன்னேட்டு வரலாற்றில் புகழ் மிகுந்த தலைவர், தன்னிகரில்லா உன்னதத் தலைவர், உலகப் பெருந்தலைவர்களில் ஒருவர், சோதனைகளை வென்று சாதனைகளைக் கண்ட தலைவர் முத்தமிழறிஞர், எனக்குத் தாயாய், தந்தையாய் இருக்கின்ற கலைஞர் அவர்களை வணங்குகிறேன். நம்முடைய தளபதி அவர்களையும் வணங்குகிறேன்.

மதுராந்தகம் தொகுதியில், இடம் கிடைத்தவுடன் பேருந்து பணிமனை அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அங்கே 50 ஏக்கர் இடம் இருக்கிறது. 2016–ல், விதி 110–ன்கீழ் மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் அவர்களால் மதுராந்தகத்திலுள்ள பணிமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படும் என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டு, தேர்வு செய்யப்பட்ட இடமே இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுராந்தகத்தில் இயங்கி வருகின்ற பேருந்து பணிமனை வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. சுமார் 60 பேருந்துகள் அங்கே பராமரிக்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பணிமனை அமைப்பதற்கு இடம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறுகின்ற அந்த இடத்தை ஆய்வு செய்து, தகுதியான இடமாக இருக்கும்பட்சத்தில், புதிய பணிமனை அமைப்பதற்கு, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு

பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள்.

திரு. சு. புகழேந்தி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மதுராந்தகம் நகரத்திலிருந்து சூனாம்பேடு செல்கின்ற வழியில் மாம்பாக்கம் என்ற இடத்தில் 50 ஏக்கர் இடம் இருக்கிறது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த இடத்தில் பேருந்து பணிமனை கட்டலாம். நான் இந்த அவையில் என்னுடைய கன்னிப் பேச்சில் பேசும்போது கோரிக்கை வைத்தேன். அரசுக் கலைக் கல்லூரியும் கட்டலாம். அரசு மேல்நிலைப் பள்ளியும் கட்டலாம். அவ்வளவு வசதி இருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த 22–ந் தேதி மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் ஒரு கேள்வியைக் கேட்டேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அன்று மாலையே பதில் கிடைக்கும் என்று தெரிவித்திருந்தார். இன்று வரை பதில் வரவில்லை. பதில் எப்போது வரும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 50 ஏக்கர் இடம் இருப்பதாகத் தெரிவித்திருக்கிறார். அந்த இடம் பேருந்து பணிமனை அமைப்பதற்கு தகுந்த இடமாக இருப்பின், அங்கே புதிய பேருந்து பணிமனை அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை நான் ஏற்கெனவே தெரிவித்திருக்கிறேன்.

2017 ஜூன் 28]

மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அதற்குரிய நிதியை வழங்கினால், அங்கே பேருந்து பணிமனை அமைக்க உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. புகழேந்தி அவர்கள் அவையில் 2 நாட்களுக்கு முன்பாக ஒரு கேள்வியைக் கேட்டார். மாலையில் நான் பதில் சொல்வதாகச் சொல்லியிருந்தேன். உண்மைதான், ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அன்றையதினம் மாலை வரவில்லை. நான் பார்த்துக்கொண்டே இருந்தேன். நீங்கள் வருவீர்கள், நீங்கள் வருவீர்கள் என்று நான் காத்துக்கொண்டிருந்தேன். நீங்கள் வரவில்லை. நீங்கள் வராதிருக்கும்போது நான் எப்படிப் பதில் சொல்வேன்? அன்றைக்கே பதில் வாங்கிவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியபடி, இன்னும் 10 நாட்களுக்குள் 4 கடைகளும் முழுமையாகத் திறக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் அவர்கள்.*

திரு. கே.எஸ். விஜயகுமார்: *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1½ கோடி தொண்டர்களின் குலதெய்வமாகவும், தமிழகத்தின் 7 கோடி மக்களின் தாயாகவும், அம்மாவாகவும் விளங்கிய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துயில் கொண்டிருக்கும் திசை நோக்கி வணங்கி, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் நிறுவனர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் நூற்றாண்டு விழாவினைக் கொண்டாட உத்தரவிட்ட நம்முடைய தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர்*

பெருமக்களுக்கும் என்னுடைய காலை வணக்கத்தினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசினால் கடந்த ஆண்டு கும்மிடிப்பூண்டி தொகுதியில் புதிய அரசு போக்குவரத்துக் கழகப் பணிமனை அமைக்கப்படும் என்ற உத்தரவிற்கிணங்க, கும்மிடிப்பூண்டியில் இடம் தேர்வு செய்யப்பட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தினை ஆய்வு செய்திருக்கிறார்கள். எனவே, அதற்கான கட்டடங்கள் இந்த ஆண்டு வழங்கப்படுமா என்பதைக் கேட்டுக்கொண்டு, அதுபோல் இந்தியாவிலேயே முதன்முதலாக அதிநவீன தொழில்நுட்பத்தோடு Integrated Check Post கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அதனை மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் தமிழக முதலமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசித்து, கூடியவிரைவில் Integrated Check Post–ஐத் திறக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.ஆர். விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன Integrated Check Post குறித்த அனைத்து வேலைகளும் முடிக்கப்பட்டுள்ளன. அதில் இருக்கக்கூடிய அனைத்து வகையான துறைகளுக்கும் software பொருத்தும் பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. அதில், வணிக வரித் துறை, போக்குவரத்துத் துறை போன்ற அனைத்துத் துறைகள் சார்ந்த software நிறுவப்படும் பணிகள் முடிந்த பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் சென்று, நவீனமயமான Integrated Check Post திறக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பணிமனை பற்றி சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில், ஏற்கெனவே நான் கூறியதுபோல், 74 புதிய பணிமனைகள்

2017 ஜூன் 28]

அமைப்பதற்கு ஆணையிட்டு, அதில் 40 புதிய பணிமனைகள் திறக்கப்பட்டிருக்கின்றன. மீதம் உள்ள பணிமனைகளை அமைப்பதற்கான வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய இடத்தில் புதிய பணிமனையை வருகின்ற நிதியாண்டில் அமைப்பதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 100, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.செல்வராசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

100—

குடமுழுக்கு

***6052—திரு. எம். செல்வராசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முசிறி தொகுதி, காருகுடியிலுள்ள அருள்மிகு சிவன் கோவிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், காருகுடி அருள்மிகு கைலாசநாதசுவாமி திருக்கோயில் குடமுழுக்கு 10–3–2003 அன்று நடைபெற்றுள்ளது. 12 ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது தொல்லியல் துறையின் கருத்துரு பெற்று, திருப்பணி மேற்கொள்ள ஏதுவாக, மதிப்பீடு தயாரிக்க மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.